## காலை உணவு – புதுமைப்பெண்– தமிழ்ப்புதல்வன்– நான் முதல்வன் திட்டம்:

# கல்வி வளர்ச்சிக்காக இத்தனை திட்டங்கள் இருக்கும் வரை தமிழ்நாட்டை, தொடர்ந்து ஆளப்போவது முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்தான்!

### சென்னையில் நடைபெற்ற ‘கல்வியில் சிறந்த தமிழ்நாடு’ விழாவில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

**சென்னை,செப்.26-**

**சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நேற்று, `கல்வியில் சிறந்த தமிழ்நாடு’ மற்றும் புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம்-2025-2026 கல்வி ஆண்டுக்கான தொடக்க விழா, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கோலாகலமாக நடைபெற்றது. விழாவில், தெலங்கான முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலை வகித்து சிறப்புரையாற்றினார்.**

**அப்போது அவர், ``காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம், நான் முதல்வன் திட்டம் போன்று கல்வி வளர்ச்சிக்காக இத்தனை திட்டங்கள் இருக்கும் வரை, தமிழ்நாட்டை ஆள்வது முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தான்” என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**

கல்வியில் சிறந்த தமிழ்நாடு நிகழ்ச்சியைக் கொண்டாட வந்துள்ள அனைவருக்கும் முதலில் என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். என் அன்பு சகோதரர், தெலங்கானாவின் முதலமைச்சர் திரு.ரேவந்த் ரெட்டி அவர்களை இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வுக்கு அன்புடன் வரவேற்கிறேன்.

**அழிக்க முடியாத சொத்து**

நம் முதலமைச்சர் அடிக்கடி சொல்வது ஒன்றே, ஒன்றுதான். கல்வி ஒன்றே அழிக்க முடியாத சொத்து என்று அவர்கள் சொல்வார்கள். கல்வி மாணவர்களுக்கான சொத்து என்றால், இங்கு அமர்ந்து இருக்கின்ற மாணவர்கள்தான் நம் தமிழ்நாட்டின் சொத்து. கடந்த மாதம், பஞ்சாப் மாநில முதலமைச்சர் திரு. பகவந்த் சிங் மான் அவர்களை, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் விரிவாக்க நிகழ்ச்சியில் கலந்துகொள்ள நமது முதலமைச்சர் அழைத்திருந்தார். அந்த நிகழ்வில், பஞ்சாப் முதலமைச்சர் இந்தத் திட்டத்தைப் பாராட்டி, தனது மாநிலத்தில் இதை அமல்படுத்த விருப்பம் தெரிவித்தார். இன்று, இந்த மாபெரும் கல்வித் திருவிழாவுக்கு, நமது முதலமைச்சர், தெலங்கானா முதலமைச்சரை அழைத்துள்ளார். இந்த நிகழ்வும் அவருக்கு ஒரு பயனுள்ள மற்றும் தாக்கமளிக்கும் அனுபவமாக இருக்கும் என நம்புகிறேன்.

**நூறு ஆண்டுகளுக்கு முன்பு**

நம் திராவிட மாடல் அரசு பள்ளிக் கல்வி முதல் உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு வரை, மாணவர்களுக்காக ஏராளமான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. 1920-ஆம் ஆண்டு பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவுத் திட்டத்தை இந்தியாவிலே முதல் மாநிலமாக அறிமுகப்படுத்தியது, நம் தமிழ்நாடுதான். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டத்தை, நூறு ஆண்டுகளுக்கு முன்பு நீதிக்கட்சி அரசு முன்னெடுத்தது. இந்தியாவிலேயே முதன்முறையாக பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு கொடுத்த முதல் மாநிலமும் நம் தமிழ்நாடுதான். வேலைக்குச் செல்லும் பெற்றோர்கள், பல நேரங்களில், குழந்தைகளுக்கு டிபன் செய்து கொடுக்க முடியாத நிலை இருந்தது. சாப்பிடாமல் வகுப்பில் இருக்கிற குழந்தைகளுக்கு காது அடைக்கும், பசி வயிற்றைக் கிள்ளும். அவர்களால் எப்படிப் பாடங்களை கவனிக்க முடியும் என்று பெற்றோர்கள் வருத்தப்பட்டது உண்டு. இன்றைக்கு அந்த பிரச்சினைகள் அனைத்தையும் நம் முதலமைச்சர் அவர்கள் தீர்த்து வைத்துள்ளார்கள்.

பள்ளிப்படிப்பை முடித்த பிறகு, குடும்பச் சூழல் காரணமாக மாணவர்கள், உயர்கல்விக்கு வராமல் இருந்து விடக்கூடாது என்று தமிழ்நாடு அரசே, கல்லூரி மாணவ - மாணவிகளுக்கு ‘புதுமைப் பெண்’, ‘தமிழ்ப்புதல்வன்’ திட்டங்களின் மூலம் மாதம் 1,000 ரூபாய் கல்வி ஊக்கத்தொகையாக வழங்கி வருகிறது. இந்த திட்டத்தின் மூலம் பயன்பெறுகிற மாணவர்கள் யாரும், நோட் புக் வாங்க வேண்டும், ப்ராஜெக்ட் மெட்டீரியல் வாங்க வேண்டும், கால்குலேட்டர் வாங்க வேண்டும் என்று அவர்களின் பெற்றோர்களிடம் கேட்க தேவையில்லை. இது மாதிரியான பொருட்களை எல்லாம், நம் முதலமைச்சர் வழங்குகின்ற 1000 ரூபாயில் இருந்து அவர்களே தாராளமாக வாங்கிக் கொள்ளலாம்.




**நான் முதல்வன் திட்டம்**

இந்தத் திட்டங்கள் வந்த பிறகு, பள்ளி படிப்பை முடித்துவிட்டு, உயர்கல்வி படிக்க கல்லூரிக்குச் செல்ல வாய்ப்பு இருந்தும், பொருளாதார சூழல் காரணமாக, உயர்கல்வியைத் தொடர இயலாத கிட்டத்தட்ட 15 ஆயிரம் மாணவர்கள், உயர்கல்வியில் இந்தத் திட்டத்தின் மூலம் சேர்ந்துள்ளார்கள். மாணவர்களை, வேலைவாய்ப்புக்குத் தயார்படுத்தும் வகையில், `நான் முதல்வன்’ திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. படிப்புடன் வேலைக்கான திறன்களையும் நான் முதல்வன் திட்டம் வழங்கி வருகிறது. குறிப்பாக, வேலை தேடுகிற நிலையைத் தாண்டி, மற்றவர்களுக்கும் வேலை கொடுக்கலாம் என்கிற தன்னம்பிக்கையை நான் முதல்வன் திட்டம் மாணவர்களுக்குக் கொடுக்கிறது.



> நம் முதலமைச்சர் அடிக்கடி சொல்வது ஒன்றே, ஒன்றுதான். கல்வி ஒன்றே அழிக்க முடியாத சொத்து என்று அவர்கள் சொல்வார்கள். கல்வி மாணவர்களுக்கான சொத்து என்றால், இங்கு அமர்ந்து இருக்கின்ற மாணவர்கள்தான் நம் தமிழ்நாட்டின் சொத்து.

கல்விக்கு மட்டுமின்றி, உடற்கல்விக்கும் - விளையாட்டுக்கும் நம்முடைய அரசும், நம் முதலமைச்சர் அவர்களும் அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்கள். இந்த நிகழ்ச்சியின் பெயரே, `கல்வியில் சிறந்த தமிழ்நாடு’, கல்விக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்காமல், எங்களின் விளையாட்டு வீரர்களுக்கும், இந்த மேடையில் இடம்கொடுத்த முதலமைச்சர் அவர்களுக்கு, இந்த நேரத்தில், விளையாட்டு வீரர்களின் சார்பாக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எப்படி நமக்கு கல்வி முக்கியமோ, அதேபோல் உடற்கல்வியும் முக்கியம் என்று இந்த நிகழ்ச்சியின் மூலமாக, நம் முதலமைச்சர் அவர்கள் தெரிய வைத்துள்ளார்கள்.

**ரூ.5 லட்சம் நன்கொடை**

நமது விளையாட்டு வீரர்களுக்கு பொருளாதாரச் சூழல் ஒரு தடையாக இருக்கக் கூடாது என்பதில், நம் முதலமைச்சர் அவர்கள் மிக உறுதியாக இருக்கிறார். எனவேதான், 2023-ஆம் ஆண்டு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையைத் தொடங்கினார். அப்படி ஒரு அறக்கட்டளை தொடங்கப்படுவது இந்தியாவில் அதுதான் முதல் முறை. அதுமட்டுமின்றி தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைக்கு முதல் நன்கொடையாக தனிப்பட்ட முறையில் 5 லட்சம் ரூபாய் நன்கொடை வழங்கினார் நமது முதலமைச்சர் அவர்கள். அறக்கட்டளைக்கு முதலமைச்சரே முதலில் பங்களித்தார் என்பதை இந்த நேரத்தில் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளையின் மூலம், இன்றைக்கு ஆயிரக்கணக்கான வீரர்களுக்கு சுமார் 25 கோடி ரூபாய் மதிப்பில் நிதி உதவியும், விளையாட்டு உபகரணங்களும் வழங்கி இருக்கிறோம். நமது இளைஞர்களை விளையாட்டில் ஊக்குவிக்க, நமது முதலமைச்சர், கடந்த ஆண்டு விளையாட்டு வீரர்களுக்கான 3% இடஒதுக்கீடு மூலம் 100-க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்களுக்கு அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் வேலை வாய்ப்பு வழங்கினார்.

மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களுக்கும் நாம் சமமான முக்கியத்துவம் அளிக்கிறோம். மாநிலம் முழுவதும் ஏற்கனவே ஆறு மாற்றுத்திறனாளி விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் ஐந்து மைதானங்கள் விரைவில் அமைக்கப்பட உள்ளன. நமது முதலமைச்சர், மற்ற வீரர்களுக்கு இணையாக மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களுக்கும் உயரிய ஊக்கத் தொகை வழங்கி வருகிறார்.

**நெகிழ்ச்சி – மகிழ்ச்சி**

இந்த ஆண்டு, விளையாட்டு வீரர்களுக்கான 3 சதவிகித இடஒதுக்கீடு மூலம் 25 மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களுக்கு அரசு வேலைவாய்ப்பு வழங்குவதற்கு நமது அரசு உறுதியேற்றுள்ளது. விளையாட்டுக்கு, நம்முடைய அரசு எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது என்று, விளையாட்டு வீரர்கள் தங்களின் கருத்துகளை இங்கே பகிர்ந்து கொண்டார்கள். குறிப்பாக, மாற்றுத்திறனாளி வீரர் தம்பி மனோஜ் கூறிய கருத்துகள் நெகிழ்ச்சியாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தன. தம்பி மனோஜ், ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்து, டான்சி(TANSI)-யில் ஒரு காண்ட்ராக் பணியாளராக வேலை செய்து கொண்டு இருந்தார். அவரின் திறமையைக் கண்டுபிடித்து, சில ஆண்டுக்கு முன்புதான் தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளையின் மூலம், முதலமைச்சரின் உத்தரவுக்கு இணங்க நிதி உதவி அளித்தோம். அவர் வெளிநாடுகளில் நடந்த பல்வேறு போட்டிகளில், வெற்றி பெற்று பதக்கங்களுடன் திரும்பி வந்து, நம் தமிழ்நாட்டுக்கும், இந்தியாவுக்கும் பெருமை சேர்த்துக்கொண்டே இருந்தார்.

அவருக்கு 3 சதவிகித இட ஒதுக்கீட்டின் கீழ், அரசு வேலையையும் நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள். தம்பி மனோஜுக்கு சென்றாண்டு திருமணம் நடந்தது. தன் திருமணத்திற்கு என்னை அழைத்திருந்தார், நானும் மதுரையில் உள்ள அவரது வீட்டுக்கே சென்று, எனது குடும்ப விழா போல கலந்துகொண்டேன். இங்கு எல்லாவற்றையும் சொன்னார். ஒன்றை மட்டும் விட்டுவிட்டார். விரைவில் மனோஜ் அவர்கள் தந்தையாகப் போகிறார் என்ற செய்தியையும் இங்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன். கடந்த இரண்டு நாட்களாக மதுரை மற்றும் விருதுநகரில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டுவிட்டு, நேற்று நள்ளிரவு மதுரையில் இருந்து விமானம் மூலம் சென்னைக்கு வந்துக்கொண்டு இருந்தேன். அப்போது தான் கவனித்தேன், என்னைவிட இரண்டு இருக்கை தள்ளிதான் தம்பி மனோஜும் உட்கார்ந்திருந்தார்.

`எங்கே சென்னைக்கா’ என்று அப்போது கேட்டேன். இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக சென்னை வருவதாகக் கூறினார். எனக்கு அவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தது. திறமை இருந்தால் போதும், திறமையாளர்களின் வாழ்க்கையை மாற்றிக் காட்ட, நம்முடைய அரசு எப்போதும் தயாராக இருக்கிறது என்பதற்கு, தம்பி மனோஜ் ஓர் சிறந்த உதாரணம்.இந்த விழாவுக்கு நிறைய ஆசிரியர்களும், மாணவர்களும் வந்து இருக்கிறீர்கள். நான் அடிக்கடி ஆசிரியர்களிடம் வைக்கின்ற ஒரே கோரிக்கை கணித ஆசிரியர், அறிவியல் ஆசிரியர்கள் எனது விளையாட்டு வகுப்பை கடன் வாங்கி, பாடம் நடத்துவதை அறவே தவிர்த்திட வேண்டும் என்று விளையாட்டுத்துறை அமைச்சராக, விளையாட்டு வீரர்கள் சார்பாக இந்த கோரிக்கையை வைக்கிறேன்.

**அண்ணாதுரைதான்**

இந்த நேரத்தில் ஒன்றை மட்டும் சொல்லி நிறைவு செய்ய விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள், ஒரு முறை சொன்னார்கள். ``நான் முதலமைச்சர் ஆன பிறகு, 3 காரியங்களை தமிழ்நாடு மற்றும் தமிழ் மக்களுக்காக செய்திருக்கிறேன். தமிழ்நாட்டுக்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டியுள்ளேன். தமிழ்நாட்டில் இந்திக்கு இடமில்லை, இருமொழிக் கொள்கை மட்டும் தான் என்று சட்டம் இயற்றி இருக்கிறேன். சுயமரியாதைத் திருமணத்திற்கு சட்ட அங்கீகாரம் கொடுத்திருக்கிறேன். இந்த மூன்றை தமிழ்நாட்டிற்காக செய்திருக்கிறேன். எனக்கு பிறகு ஆட்சிக்கு வரக்கூடியவர்கள், இந்த மூன்றையும் மாற்ற நினைத்தால், அவர்களின் மனதில் ஒரு அச்சம் வரும். இதையெல்லாம் மாற்றிவிட்டால், மக்கள் நம்மை என்ன செய்வார்களோ என்கிற பயம் வரும். அந்த அச்சம் எதிரிகளை எவ்வளவு நாளைக்கு ஆட்டுகிறதோ, அதுவரைக்கும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் இந்த அண்ணாதுரைதான்” என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள்.

அதையே, நான் இப்போது கொஞ்சம் மாற்றி சொல்ல விரும்புகிறேன். காலை உணவு திட்டம், புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம், நான் முதல்வன் திட்டம் போன்ற திட்டங்களை எல்லாம் நம் முதலமைச்சரும், திராவிட மாடல் அரசும் வழங்கி இருக்கிறது. இந்தத் திட்டங்களை எல்லாம் மாற்றிவிடலாம் என்று யாராவது நினைத்தால் கூட, அவர்களின் மனதிலும் நிச்சயமாக ஒரு பயம் வரும். அந்த பயம் இருக்கிற வரை, தமிழ்நாட்டை நம்முடைய முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்தான் ஆள்கிறார் என்று பொருள்.இன்றைக்கு தமிழ்ப்புதல்வன் - புதுமைப்பெண் திட்டங்கள் மூலம், இந்த கல்வி ஆண்டிற்கான ஊக்கத் தொகையைப் பெற்றுள்ள அத்தனை மாணவச் செல்வங்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே இருக்கும் மாணவர்கள், கல்வியில் சிறந்த தமிழ்நாட்டை இன்னும் பல உயரங்களுக்கு எடுத்துச் சென்று, நம் மாநிலத்தின் பெருமையையும், இந்திய ஒன்றியத்தின் பெருமையையும் உலகிற்கு பறைசாற்றுவார்கள் என்று கூறிக்கொண்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.